SOND

SOND Better World Movement

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk
Web:-sond.lk

# மாதாந்த அறிக்கை

சித்திரை, 2012.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

## இதழின் உள்ளே

1.யாழ்
2.அம்பாறை
3.மட்டக்களப்பு
ஆகிய மூன்று மாவட்டங்களின் செயற்பாடுகள்

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மரம் நடுகை திட்டம்.

**Diakonia** அமைப்பின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாநகரசபையின் ஒத்துழைப்புடன் எமது அமைப்பு மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட சூழலை அழகாகவும், சுத்தமாகவும் அங்குள்ள இயற்கை வளங்களை பாதுகாத்தலும் தொடர்பான செயற்பாட்டில்.நகரை அழகு படுத்தல் தொடர்பான பொறுப்பு எமக்கு வழங்கப்பட்ட நிலையில் அதற்கான மாதிரிகள் கிழக்கு மாகாண சபை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரித்து வருகின்றது. அதற்கான வேலைகள் நிறைவடைந்ததும் வேலைகளை ஆரம்பிக்க முடியுமென மாநகர சபை முதல்வரினால் அறிவித்தல். விடப்பட்டுள்ளது தொடர்ந்தும் இதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றுவருகின்றது. நடப்பட்ட அனைத்து மரங்களும் பராமரிக்கப்பட வருகிறது.





## பாலர் பாடசாலை

எதிர் கால மாணவர்களின் நலத்தினைக் கொண்டு மட்டக்களப்பு **SOND** நிறுவனமானது களுவாஞ்சிக்குடி, களுதாவளை, புதுக்குடியிருப்பு, ஓட்டமாவடி ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவிலும் நான்கு முன்பள்ளிகளை இயக்கி வருகின்றது.

முன்பள்ளிகள் அனைத்தும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக விடப்பட்டு ஆரம்பமாகியது. இம்மாதத்துக்கான பாடசாலை செயற்பாடாக நாம் 30.04.2012திகதி YMHA பாடசாலைக்கு “நல்ல பழக்கவழக்கங்கள்” எனும் கருத்துக்கள் அடங்கிய இருவெட்டினை திரையிட்டு இருந்தோம். இதற்கு 14 பெண் மாணவர்களும் 24 ஆண் மாணவர்களும் இரு ஆசிரியர்கள் உட்பட சில பெற்றோர்களும் இதனை ஆர்வத்துடன் கண்டுகளித்தார்கள்.

## திறன்களை உயர்த்துதலும், சேவைகளையும் வளங்களையும் பெறும் நிலையை மேம்படுத்தலும்

*விவசாய அமைப்புக்கள்*

### மாதாந்த கலந்துரையாடல் (APC)

விவசாய அமைப்புக்களிற்கு பெரும்பாக உத்தியோகத்திரின் மூலம் கலந்துரையாடல் நடை பெற்றது கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கீழ்வருமாறு.

- களஞ்சிய அறை , களம் அமைப்பதற்கு கடன் பெறும்பொருட்டு அமைப்புக்களை வங்கிகளுடன் இணைத்தல்
- 25 அமைப்புக்களையும் மதிப்பீடு செய்தல் அங்கத்தவர் தகவல் சேகரிக்காத அமைப்புகளின் அங்கத்துவ தகவல் சேகரித்தல்
- **APC** ன் மின்சார கட்டண பட்டியலை தொடராகச் செலுத்தும்படி **DO** அவர்களை தெளிவு படுத்தல்
- வாதகல்மடு கமநல அமைப்பில் 152 அங்கத்தவர்கள் உள்ளனர். இவ்வமைப்பில் ஒரு நிர்வாக கலந்துரையாடலும் ஒரு பொதுக்கலந்துரையாடலும் அமைப்பின் தலைவர் நா.நவரெட்ணம் தலைமையில் சிவலிங்கத்தின் வாடியில் இடம் பெற்றது அதன் விபரம் பின்வருமாறு

| இல | நடைபெற்ற கலந்துரையாடல் | காலம் | மொாத்த உறுப்பினர்கள் | கலந்து கொண்டோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பொதுக்கலந்துரையாடல் | 08.04.2012 | 152 | 32 |
| 02 | | 15.04..2012 | 152 | 56 |
| 03 | | 22.04.2012 | 152 | 34 |

*எடுக்கப்பட்ட தீர்மானங்கள்*

- மானிய உரப்படிவம் வழங்குதல்
- கால்நடைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும்
- குறிப்பிட்ட காலத்திற்குள் நீரைப் பாய்சுதல்







SOND

# தகவல் வளநிலையம்

## நூலகம்

சமூகத்தின் வாசிப்பு திறனையும் தேடல் திறனையும் அதிகரிக்கும் பொருட்டு ஐழுனே அமைப்பினால் அறிவுசார் புத்தகங்கள், இறுவெட்டுக்கள், கணனிக்கல்வி, கணனி பயிற்சி, கடந்த கால பயிற்சியின் அறிக்கைகள், பயிற்சிகள் வழங்கல், உளமகிழ்வூட்டும் திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் எமது வளநிலையத்தில் கல்வி, பொதுவிடயம். கணனி மருத்துவம்., சமயம்., உளவியல், பொதுஅறிவு, தியானம், பெண்கள், முகாமைத்துவம், NGOs, கதைகள், பெண்கள், அரசியல், ஆங்கிலம், கவிதைகள், பெரியார்கள் வரலாறு, சுயமுன்னேற்றம், நகைச்சுவை, சிறுவர்கள் போன்ற 20 தலைப்புக்கள் உள்ளடங்கியதாக 1424 புத்தகங்கள் அனைவரின் பாவனைக்காக உள்ளது. இம்மாதம் வளநிலையத்தில் பயன்படுத்தப்பட்ட இறுவெட்டுக்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

இம்மாத வளநிலைய இறு வெட்டுக்களை பயன்படுத்தியோர் விபரம்
35 சிறுவர்கள் 2 இளையோர்கள் உட்பட 37 பேர் 37 இறு வெட்டுக்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

## கணனி

எமது அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணனி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணனி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் வள நிலையம் மூலமாக சித்தரை மாதம் பயன் அடைந்து கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு.

மேலும் 09.04.2012 இணைப்பாளர் நிகழ்ச்சிதிட்ட உத்தியோகஸ்தர் ஆகியோர் கல்லடி டச்பார் கிராம சேவையாளரின் வேண்டுதலுக்கிணங்க கல்லடி பல்தேவைக்கட்டடத்தில் தையல்பயிற்சி பெறும் யுவதிகளுடன் கலந்துரையாடலினை மேற்கொண்டிருந்தோம் எமது வளநிலையத்தினை பற்றிய தகவலும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இம்மாதம் வள நிலைய கணணி கற்றுக்கொன்டோர் விபரம்
சிறுவர்கள், அரச ஊழியர்கள் உட்பட 8 தலைப்பில் 147 பேரினால் எமது வள நிலையக் கணனி பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அரச ஊழியர்களுக்காக கணனி வகுப்புக்களை நடாத்தும் முகமாக பிரதேச செயலகம் மற்றும் சமூர்த்தி வங்கிகளுக்கும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளது.



SOND

## இலவச செயற்பாடு

நிருவாக பிரிவின் கீழ் சித்திரை மாதம் இடம்பெற்ற செயற்பாடுகள் பின்வருமாறு வளநிலையத்தில் கணணி கற்றுக்கொள்ள வருகை தரும் சிறுவர்களின் உதவியுடன் கழிவுகளாக்கப்பட்ட காகிதங்களை பயன்படுத்தி மாத்திரை போடுவதற்கான சிறிய பைகள் தயாரிக்கப்பட்டு கல்லடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு ச .உ.ஜானி, ச.யனுராஜன்ஆகிய சிறுவர்களினால் வழங்கப்பட்டது. இது போன்ற இலவச செயற்பாடுகளை சிறுவர்கள் நடாத்தத் திட்டமிட்டுள்ளார்கள்.



## பணியாளர் பயிற்சி

எமது அலுவலக பணியாளர்கள் தங்களது அறிவு திறனை வளர்த்துக்கொள்ளும் முகமாக இம்மாதம் 27.04.2012 அன்று அமைப்பின் இணைப்பாளரினால் Video Editing சம்பந்தமான பயிற்சி இடம் பெற்றது.

தொடர்ந்து கற்றுக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எமது அமைப்பினால் தயாரிக்கப்படும் ஆவணங்களை உரிய ஊழியர்கள் சிறந்த முறையில் ஆவணப்படுத்த உதவவேண்டும் எனவும் கூறப்பட்டதுடன் செய்முறையில் ஈடுபடும் போது ஏற்படும் சந்தேகங்களை தன்னுடன் கேட்டு தெளிவு பெறமுடியும் என்பதனையும் இப்பயிற்சியின் போது இணைப்பாளர் தெளிவுபடுத்தினார்.

## வாராந்தக் கலந்துரையாடல்

வாராந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் காலங்களில் கீழ்வரும் வேலைகளை எமது அமைப்பினால் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

- மாதாந்த ஆய்வரங்கம்
- இளைஞர்களுக்கான முகாமைத்துவ கற்கைநெறியினை ஆரம்பித்தல்
- போயா தினங்களில் முதியோர் இல்லங்களுக்கு ஒரு நேர உணவளித்தல்

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## பாலர் பாடசாலை ஆசிரியருக்கான கலந்துரையாடல்

பாலர் பாடசாலையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு இம் மாதம் அம்பாரை மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடலானது 2012.04.11 ஆம் திகதி அன்று காலை 10.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 10 முன்பள்ளியைச் சேர்ந்த 19 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது.

கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. இனி வரும் கலந்துரையாடல்களின் போது ஒவ்வொரு பாலர் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களும் கற்றல் செயற்பாடுகள் எனைய ஆசிரியர்களுக்கு செயல்முறைபயிற்சியின் ஊடாக செய்து காண்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
2. எதிர்வரும் மாதம் மாதாந்தக் கலந்துரையாடலின் போது சம்சுல் உலூம் பாலர் பாடசாலை ஆசிரியர்களினால் ஏனைய ஆசிரியர்களுக்கு கற்றல செயற்பாடுகள் செயல்முறைப்பயிற்சியின் ஊடாக செய்து காண்பிக்கப்படும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
3. October மாதம் சிறுவர் தினத்தினை முன்னிட்டு அனைத்து பாலர் பாடசாலை ஆசிரியர்களும் உங்களது பாலர் பாடசாலைச் சேர்ந்த ஒரு சில மாணவர்களை கற்றல் செயற்பாடு அடங்கிய நிகழ்ச்சிகளோடு எமது அமைப்பிற்கு வருகை தந்து மாதாந்த கலந்துரையாடலின் முடிவின் போது நிகழ்ச்சிகள் இடம்பெறும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.





## திறன்களை உயர்த்துதலும், சேவைகளையும் வளங்களையும் பெறும் நிலையை மேம்படுத்தலும்

இத் திட்டத்தின் கீழ் செயற்படும் பெண்கள், விவசாயச் சங்கங்கத்தினால் நடைமுறைப்படுத்தும் தொழில்களின் நிலைமைகள் பற்றி களவிஜயம் மேற் கொள்ளப்பட்டது. இக் களவிஜயத்தின் போது தொழினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கப்பட்டது.

# சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்

## இம் மாதம் நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடல் நடைபெற்ற கலந்துரையாடலின் விபரமும் கலந்துகொண்ட சிறுவர்களின் விபரமும் கீழ்வருமாறு

| இல | திகதி | கலந்துரையாடல் நடாத்திய பணியாளர் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.04.01 | தி.ஜெனிதா | 12 | 05 | 17 |
| 02 | 2012.04.08 | | 12 | 08 | 20 |
| 03 | 2012.04.22 | | 11 | 05 | 16 |
| 04 | 2012.04.29 | | 14 | 10 | 24 |

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. எமது அமைப்பினால் வழங்கப்பட்ட 05 மரங்கன்றுகளை அவரவர் பாடசாலையில் நட்டு பராமரிக்கின்றனர்.
02. இம் மாதம் சிறுவர்களால் ஒரு சிரமதான நிகழ்வும்,ஒரு நடமாடும் நூலக சேவையும் மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

செயற்பாடுகள்.

| இல | திகதி | செயற்பாடு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.04.10 | அக்கரைப்பற்று பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் சிரமதானம் செய்யப்பட்டுள்ளது. | 05 | 03 | 08 |
| 02 | 2012.04.24 | அக்கரைப்பற்று-08 பிரிவுக்குள் நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்பட்டது. | 06 | 05 | 11 |





SOND

## SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று ஆங்கில வகுப்பு பணியாளரான சுரேஸ்குமார் அவர்களினாலும் ,ஒரு கணணி தியேரி வகுப்பு பணியாளரான ஜெனிதா அவர்களினாலும் நடாத்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

### ஆங்கில வகுப்பு

| இல | திகதி | கற்பித்த பணியாளர் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.04.01 | | 08 | 06 | 14 |
| 02 | 2012.04.08 | கீ.சுரேஸ்குமார் | 12 | 04 | 16 |
| 03 | 2012.04.22 | | 11 | 05 | 16 |

### கணணி வகுப்பு

| இல | திகதி | கற்பித்த பணியாளர் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.04.08 | தி.ஜெனிதா | 12 | 04 | 16 |

01. 04 பாடசாலையைச் சேர்ந்த சிறுவர்கள் எமது கழக உறுப்பினர்களான இருக்கின்றார்கள் இதனை மையமாகக்கொண்டு இம் மாதம் சிறுவர்களுக்கு 05 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.
02. இம் மாதம் சிறுவர்களுக்கிடையே பொதுஅறிவுப் வினாவிடைப் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளது.
03. இம் மாதம் காந்தி கழக சிறுவர்கள் விளையாடுவதற்காக நான்கு வகையான விளையாட்டுப்பொருட்கள் உரிய சிறுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட பொருட்களின் விபரமும் அதனை பெற்றுக்கொண்ட சிறுவர்களின் விபரமும் பின்வருமாறு.
04. காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று உளமகிழ்வூட்டும் திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு






SOND

## கணினி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 15 சிறுவர்கள் 16 தடவையும், 04 இளையோர்கள் 02 தடவையும் கணனியைப் பயன்படுத்தியுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.

| வாசகர் வகை | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| சிறுவர் | 15 | 11 | 04 |
| இளையோர் | 04 | 02 | 02 |





## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள் ஆகியோர் இம்மாதம் 8 தலைப்பில் 35 புத்தகங்களையும் 4 தலைப்பில் 22 இறுவெட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

# கலந்துரையாடல், பயிற்சி

## பணியாளர் கலந்துரையாடல்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக 2012.04.07 ம் திகதி நிறைவேற்றுப்பணிப்பாளர் தலைமையில் எமது அலுவலகத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

## பணியாளர் பயிற்சி

PCA அமைப்பினால் 2012.04.06 ம் திகதி நடைபெற்ற தொடர்பாடல் பயிற்சியில் எமது அமைப்பின் சார்பாக விஜயகுமார், நிஷாந்தி ஆகிய பணியாளர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## *Mine Risk Education – மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம்*

04.04.2012 வவுனியாவிலும் 10.04.2012 கொழும்பிலும் நடைபெற்ற தேசிய **Mine action Day** ஐ முன்னிட்டு நடாத்தப்பட்ட கண்காட்சியில் எமது **SOND** நிறுவன **MRE** பணியாளர்கள் கலந்துகொண்டனர்.










SOND

# *Non State Actors in Development Project – அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்*

## வாழ்வாதார உதவி வழங்கல்

வறுமை நிலையிலான பெண்களின் வாழ்வாதார திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் சிறுதொழில் முயற்சிக்கான உதவியானது நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, யாழ் பிரதேச செயலாளர் பிரிவு, சங்காணை பிரதேச செயலாளர் பிரிவு, சன்டிலிப்பாய் போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.










## ஆவணப்படுத்தல் பயிற்சி

சமூகமட்ட அமைப்புக்களுக்கான ஆவணப்படுத்தல் பயிற்சியானது EU NSA திட்ட உத்தியோகத்தர் திரு த.ஜயந்தன் அவர்களால் 09.04.2012 SOND அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. இதில் 28 சமூகமட்ட அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆவணப்படுத்தல் பற்றிய பயிற்சியை பெற்றுக்கொண்டனர்.



SOND

## கோப்பாய் மக்கள் மன்ற கலந்துரையாடல்

பிரதேசசபை உறுப்பினர்களுடனான கோப்பாய் மக்கள் மன்ற கலந்துரையாடல் 18.04.2012 அன்று புத்தூர் பிரதேசசபையில் நடைபெற்றது இதில் பாதீனிய ஒழிப்பு மற்றும் திண்மக்கழிவு தொடர்பான விடயங்கள் பிரதேசசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

## வலி கிழக்கு புத்தூர் பிரதேச சபையுடனான ஒருங்கிணைப்பு கலந்துரையாடல்

கோப்பாய் பிரதேசத்தில் முன்னெடுக்கத்தக்க அபிவிருத்தி வேலைகள் குறித்தும் பொதுமக்களின் பங்குபற்றுதலை பிரதேசசபை திட்டமிடலில் உள்வாங்குவதற்குமான கலந்துரையாடல் 18.04.2012 அன்று புத்தூர் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள்,மக்கள் மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நல்லூர் மக்கள் மன்ற கலந்துரையாடல்

நல்லூர் மக்கள் மன்ற கலந்துரையாடல் 20.04.2012 அன்று SOND அலுவலகத்தில் நடைபெற்றது இதில் 10 மக்கள் மன்ற பிரதிநிதிகள் மற்றும் SOND NSA பணியாளர்கள் கலந்துகொண்டனர். கிராமமட்டத்தில் செயற்குழுவை அமைத்து பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெறுதல் தொடர்பில் ஆராயப்பட்டது.






SOND

# *Staff Training*

வெளியிடங்களுக்கு பயிற்சிக்காக செல்லுகின்ற எமது நிறுவன பணியாளர்கள் தாம் பெற்றுக்கொண்ட பயிற்சியினை ஏனைய பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வது பயனுடையதாக அமையும் என பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டதற்கமைய ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மாலை 3.30 மணிதொடக்கம் 4.30 மணிவரைக்கும் இவ் பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. அதற்கமைய 10.04.2012 பணியார்களான விமல்,ஜயந்தன் ஆகியோரால் **Capacity Building Training** தொடர்பான பகிர்வு நடைபெற்றதோடு 17.04.2012 ஜயந்தன் அவர்களால் **Documentation** தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டது.







# *மாதாந்த ஆய்வரங்கம்*

**SOND** நிறுவனத்தில் யாழ் குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையை தூண்டவும் அபிவிருத்தியில் அவர்கள் பங்களிப்பினை பெறும் பொருட்டும் எமது மாவட்டம் தழுவிய பொதுப்பிரச்சனைகளை கருப்பொருளாகக் கொண்டு மாதாந்த ஆய்வரங்கு ஒன்றினை நடாத்திவருகின்றது.

இதன் அடிப்படையில் 21.04.2012 அன்று 10.00 மணிமுதல் 12.30 மணிவரை SOND நிறுவனத்தில் "மாறிவரும் பொருளாதார சூழலில் சமூகத்தின் பங்கு" என்னும் கருப்பொருளில் இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண சிரேஸ்ட முகாமையாளர் திரு. ப. சிவதீபன் அவர்களால் விரிவுரை நடாத்தப்பட்டது. இதில் பலர் கலந்துகொண்டனர்.








SOND

## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.